852

மாசுக் பிரகாஷ்.

1913

47

T.D.R.e. 78. ACL-TNAL 00079

R.R.NO: 852-3.1914.


R4
N14
11444

852

MORAL LESSONS

(TAMIL)

MADRAS



MADRAS:


C. COOMARASAWMY NAIDU & SONS

Copy Right] 1913 [*1 Anna*

MORAL LESSONS

(TAMIL)

8 S 2



MADRAS:

C. COOMARASAWMY NAIDU & SONS

Copy Right] 1913 [*1 Anna*

MORAL LESSONS

STORIES AND STORY ACTINGS

PART I—STORIES

FRIENDSHIP

நட்பின் பெருமை

முற்காலத்தில் வடமதுரையில் குசேலர் என்னும் பிராமணர் ஒருவர் இருந்தார். அவர் சுசீலை என்னும் பெண்ணை மணந்து கொண்டார். வெகுகாலம் வரையில் புத்திரசந்தானம் இல்லாமலிருந்தது. மோகூத்திற் கேது வான புத்திரனை அடைய சுவாமியை சோக்கிப் பிரார்த்தனை செய்தார். அவர் கிருபையால் இருபத்தேழு பிள்ளைகள் பிறந்தனர். அவர் மிகவும் தரித்திரர் ஆனபடியால் அவர் காட்டில் உதிர்ந்து கிடக்கும் புல்லரிசியைப் பொறுக்கி வந்து சமைத்துத் தாமும் உண்டு அதிதிகளுக்கும் இட்டு வந்தார். இப்படி இருக்கையில் ஒருநாள் சுசீலை கணவனை வணங்கி "வெகு காலமாக இத்தரித்திரத்தினல் பிடிக்கப் பட்டு வருகின்றோமே, உம்முடைய பால்ய சிநேகனை கண்ணபிரானிடஞ் சென்று நம் வறுமையைப் போக்கும் வழியைத் தேடிவரலாகாதா?" என்று கேட்டாள். அதற் குக் குசேலர் சிருஷ்டித்த கடவுள் ஒருவர் உண்டு. அவர் "கண்ணுழையாக் காட்டிற் கருங்கற் றவளைக்கு முண்ணும்

படி யறிந்தூட்டுவர். கண்ணும் நமக்கும் படியளப்பார்.
ஆனபடியினல் நாம் கவலைப் படுவதேன்? கண்ணனிடம்
மோக்ஷத்தை விரும்பி யல்லவோ செல்லவேண்டும்" என
சுசீலை இம்மை, மறுமை இரண்டிற்கும் வேறுவான
காரண வஸ்துவினிடம் சென்று வருகவென்று அவ
கொடுத்தனுப்ப, அவ்வவலைத் தன் கந்தையில் சுற்றிக்
கட்கத்தில் வைத்துக்கொண்டு கண்ணனிடம் செல்ல, அ
கண்ணன் மனமுவந்து, வரவினை ஏற்று உபசரித்து அவ
தந்த அவலைத் தானருந்திக் களித்து அவருக்கு விடை
கொடுத்து அனுப்பினர். குசேலர் வீட்டிற்குத் திரும்பி
வந்து தன் வீட்டு வாயிலை யறியாமல் வருந்திக்கொண்
டிருந்தனர். அப்பொழுது சுசீலை சகலாபரண பூஷிதை
யாய் நாயகன் வரவை நாடிச்சென்று உள்ளழைத்து உ
சரித்தனள். அந்நிதி யளித்த கண்ணனைக் கனவிலும் ம
வாது காலங் கழித்து இறுதியில் மோக்ஷத்தை யடை
தார்கள்.

கருத்து.

முகநக நட்பது நட்பன்று. நெஞ்சத்
தகநக நட்பது நட்பு. (திருக்குறள்

கதை நடிப்பு.

அரைமணி நேரம் வரையில் இக்கதையைச் சொ
லிப் பின் பிள்ளைகளில் ஒருவனைக் குசேலனாகவும், ஒ
வனைச் சுசீலையாகவும், மற்றொருவனைக் கண்ணனாகவு
இருக்கச்செய்து கதையி லுள்ளபடி நடிக்கச்செய்
வேண்டும்.

சித்திரம் வரைதல்.

சம்பாஷணைப் பாடமானவுடன் ஒவ்வொருவருக்கு
சாக்குத் துண்டொன்றும், பிரௌன் பேப்பர் ஒன்று
பாகித்துக் கொடுத்துப் பின் கதையில் வருகிற குடி

OFFICE OF THE REGISTRAR OF
MADRAS

அரண்மனை, ஆபரணங்கள் முதலானவைகளை உருவமைக்கச் செய்யலாம்.

N. B.—இக்கதையிலும் இதை யடுத்துவரும் பிரதி கதைகளிலும் இம்மாதிரியே செய்து வரல் வேண்டும்.

PIETY

பக்தியின் மகிமை

"பக்தி வலியிற் படுவோன் காண்க."

தென்னாட்டில் சிறந்து விளங்கும் ஸ்ரீ வில்லிபுத்தூரென்னும் ஊர் ஒன்றுண்டு. அதில் முகுந்தாசாரியார் என்பவர் ஒருவரிருந்தார். அவருக்குப் பதுமை யென்னும் மனைவி ஒருத்தி இருந்தாள். அவர்கள் நெடுங்காலம் புத்திரசந்தான மில்லாமல் பரலோக வின்பத்தைக் கொடுக்கத்தக்க புத்திரனை விரும்பி எம்பெருமானைக் குறித்துப் பிரார்த்தித்துக்கொண்டிருந்தார்கள். சுவாமி பின் கிருபையால் பதுமையின் வயிற்றில் கோடி சூர்யோதயம் போன்ற ஓர் புத்திரன் பிறந்தான். அவனுக்கு விஷ்ணுசித்தன் என்னும் நாமம் இடப்பட்டது. அவன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தான். அவர்கள் குலாசாரப்படி உபநயனம் செய்வித்துச் சகல கலைகளையும் கற்பித்து வந்தார்கள். அவன் அவைகளை எளிதில் கற்று எப்பொழுதும் ஸ்ரீமந் நாராயணனே நித்திய மென்று மனதில் எண்ணிக்கொண்டு அவரையே சேவித்து வந்தான். இப்படிச் சேவித்து வரும் நாளில் பாண்டிய தேசத்து அரசராகிய ஸ்ரீ வல்லபதேவருடைய சமுகத்தில் அவருடைய புரோஹிதராகிய செல்வரம்பி என்னும் பிராமணர் "இந்த உலகத்தில் உள்ள பல மதங்

களில் எந்த மதத்தில் உண்மை யிருக்கிற தென்பதை யறிய உமது சபைக்கு முன்னே பொற்கிழி ஒன்றைத் தூக்கிக் கட்டிவைத்து அதை எந்த மதஸ்தர் தம் சித்தாந்தத்தினுல் அறுவிக்கிறாரோ அவருடைய சித்தாந்தமே உண்மையானது என்று நாம் தெளிந்துகொள்ளலாம்" என்று சொன்னர். அது கேட்டு அரசன் அவ்விதமே செய்வித்து அச் சங்கதியை உலக முழுவதும் அறிவித்தார். அப்பொழுது சகல மதஸ்தர்களும் அங்கு வந்து கூடினர்கள். ஸ்ரீ விஷ்ணுசித்தரின் பக்தியை மெச்சி ஸ்ரீமந் நாராயணன் கனவில் தோன்றி "போய் நமது சித்தாந்தத்தைச் சொன்னல் கிழியறுபடும்" என்று சொல்லி மறைந்தனர். இதைக் கனவில் கண்டு தாம் கண்ட கனவு பொய்க்காது என்று நிச்சயம் கொண்டு பாண்டிய நாட்டு அரசனுடைய கொலு மண்டபத்திற்கு வந்து சேர்ந்தார்.

அரசன் அவரவர்கள் அந்தஸ்துக் கேற்றபடி உபசாரம் செய்து தக்க ஆசனங்கள் அளித்தார். பின் அரசன் எழுந்து அங்கு வந்திருந்தவர்களை நோக்கி, "உங்களில் யார் தமது சமய சித்தாந்தத்தினுல் அங்குத்தொங்கவிட்டுள்ள கிழியை அறுவிக்கிறாரோ அவருடைய மதத்திற்கு நான் அடிமை" என்று சொன்னர். அதுகேட்டு ஒவ்வொரு மதஸ்தர்களும் தங்கள் தங்கள் மத சித்தாந்தங்களைச் சொல்லியும் கிழி அறுபடவில்லை. அதைக்கண்டு வெட்கி நிற்கையில் விஷ்ணுசித்தர் எழுந்து விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை எல்லோரும் கேட்கும்படி சொன்னர். உடனே பொற்கிழியானது அறுபட்டு விஷ்ணுசித்தரின் பாதங்களுக்குச் சமீபத்தில் வந்து விழுந்தது. அது கண்டு எல்லோரும் ஆச்சரிய மடைந்தார்கள். இதர சமயத்தவர்கள் எல்லாம் விசிஷ்டாத்வைதமே மேலானதென்று

கொண்டாடி அதைக் கைக்கொண்டார்கள். பின்பு அரசன் விஷ்ணுசித்தரை நகர்வலம் செய்வித்து அநேக விருதுகள் கொடுத்து அவரை ஊருக்கு அனுப்பினர். அவர் வெகு காலம் வரையில் அநேக திவ்ய தேசங்களில் எம்பெருமானைச் சேவித்து இறுதியில் முக்தி யடைந்தார்.

கருத்து.

'பக்தி செய்தால் முக்தி யடையலாம்.'

GAMBLING

சூதாட்டம்

வெகு காலத்திற்கு முன் நிடத நாட்டைப் பரிபாலனம் செய்துவந்த நளன் என்னும் அரசன் ஒருவன் இருந்தான். அவனைச் சனி தொடர அதனால் புஷ்கர ராஜனுடன் சூதாட உடன்பட்டான். அந்த ஆட்டத்தினால் நாடு, நகரங்களை யிழந்து தமயந்தியுடன் காட்டிற்குப் போகும்படி நேரிட்டது. அங்குத் தமயந்தி ஒருபக்கமும் தான் ஒருபக்கமுமாகப் பிரிந்து அலைந்தனர். அப்பொழுதும் சனீசுவரனுடைய வல்லமையினாலே நான்குபக்கமும் அக்கினி சுவாலைவிட்டெரிய அதன் நடுவில் கார்க்கோடகன் என்னும் பாம்பு தப்பிப்போக வழி தெரியாமல் தவித்துக்கொண்டிருப்பதைக் கண்டான். அப்பொழுது தன் ஆபத்தையும் எண்ணிப் பாராமல் நளன் அந்த நெருப்பில் புகுந்து பாம்பின் வாலைப் பிடித்து அதை எடுத்து அப்புறம் விட்டான். அப் பாம்பு நள மகாராஜன் கையில் கடிக்க, உடனே அவன் சரீரம் வேறு ரூபமடைந்தது. அடையவும் நளன் பாம்பைப் பார்த்து, நான் செய்த உபகாரத்திற்குப் பதில் இதுதானா என்று கேட்டான். பாம்பு "இவ்விதமான உருவத்துடன் நீ எங்குச் சென்றாலும்

பிழைப்புக்கு இடமுண்டாகும். உனக்கு நேரிட்ட கஷ்டங்களெல்லாம் தீர்ந்த பிறகு என்னை நினைப்பாயானால் நான் வந்து உன் சுயரூபத்தைக்கொடுத்துவிட்டுப்போகிறேன்" என்று சொல்லிற்று. அதைக் கேட்டு நள மகாராஜன் சந்தோஷமடைந்தான். அப்பால் நளன் ருதுபர்ண மகாராஜனிடம் சுயம்பாகியாகவும், சாரதியாகவும் அமர்ந்து காலங்கழித்து வந்தான்.

இது இப்படியிருக்கையில் நளனை விட்டுப் பிரிந்த தமயந்தி காட்டில் அதிக கஷ்டங்களை அடைந்து இறுதியில் தன் தகப்பன் வீடுபோய்ச் சேர்ந்தாள். அங்குத் தமயந்தி தூதர்கள் மூலமாய் நளன் இருக்குமிடத்தைத் தெரிந்து தனக்கு இரண்டாவது சுயம்வரம் என்று ருதுபர்ண மகாராஜனுக்கு அறிவித்தாள். ருதுபர்ண மகாராஜன் சாரதியான நளனுடன் அங்குச் சென்றான். சாரதியாயிருப்பது நளன் தான் என்று அறிந்துகொண்டுவந்தனை வழிபாடுகள் செய்து இவ்விஷயத்தைத் தன் தகப்பனுக்கும் ருதுபர்ண மகாராஜனுக்கும் அறிவித்துத் தன் நாயகனைச் சாரதித் தொழிலிலிருந்து விடுவித்தாள். பிறகு தெய்வகடாக்ஷத்தால் கலியும் நீங்கினது. நளன் கார்க்கோடகனை நினைக்கத் தன் சுயரூபம் வந்துவிட்டது. வந்துவிடவும் பீமராஜன் ஆடையாபரணாதிகளால் நளனை அலங்காரம் செய்து கிடந்த நாட்டிற்கு அனுப்ப இழந்தபோன தன் நாடு, நகர் முதலானவைகளைப் பெற்று மன்னுயிரையெல்லாம் தன்னுயிர்போலப் பாவித்து மகாகீர்த்தியுடன் ராஜ்ய பரிபாலனம் பண்ணிக்கொண்டு சுகமாக வாழ்ந்திருந்தான்.

கருத்து.

1. "ருது விரும்பேல்"
2. "ருதும் வாதும் வேதனை செய்யும்"



JUSTICE

நீதி செலுத்தல்

ஒரு ஊரில் நான்கு திருடர்களிருந்தார்கள். அவர்கள் ஊர் ஊராய்க் கொள்ளை யடிப்பது வழக்கம். ஒரு நாள் ஒரு ராஜன் அரண்மனையில் கொள்ளை யடித்துக் கிடைத்த சொத்துக்களை ஒரு தோண்டியில் போட்டுத் தண்ணீர்ப் பந்தல் கிழவி ஒருத்தியின் முற்றத்தில் புதைத்து வைத்துத் தாங்கள் நால்வரும் வந்து கேட்டாலொழிய ஒருவர் இருவர்வந்து கேட்டால் கொடுக்கக் கூடாது என்று அவளிடம் சொல்லிப் போனார்கள். மறுநாள் அவ்வழியே நால்வரும் வந்தார்கள். அவர்களுக்கு அப்பொழுது அதிக தாகம் உண்டாயிருந்தது சிறிது தூரத்தில் ஒரு மரத்தடியில் உட்கார்ந்துகொண்டு ஒருவனைத் தோண்டியில் ஜலம் வாங்கிவரும்படி தண்ணீர்ப் பந்தலுக்கு அனுப்பினார்கள். அவன் போய்த் தோண்டியைக் கேட்க "நீங்கள் நால்வரும் வந்தால் தான் கொடுப்பேன்" என்றாள். அவன் "மற்ற மூவரும் அம்மரத்தடியில் இருக்கிறார்கள்; நீ அவர்களைக் கேட்டுக்கொள்" என்றான். அது கேட்டு அவள் அவர்களை நோக்கித் "தோண்டி கொடுக்கிறதா" என்று கேட்க, 'கொடு' என்று சொன்னார்கள். உடனே திருடன் தோண்டியை வாங்கிக்கொண்டு அதிக சந்தோஷமாய்க் கொல்லை வழியாகப் போய்விட்டான். மற்றைய மூவரும் போனவன் தோண்டி எடுத்துக்கொண்டு வாராமையைக் கண்டு கோபாவேசங்கொண்டு கிழவியைக் கேட்க, "அவன் அப்பொழுதே புதைத்திருந்ததைத் தோண்டி எடுத்துச் சென்றான்" என்றாள். மூவரும் விசனமுற்று அவளை நியாயாதிபதியிடம் கொண்டுபோய் விட்டார்கள். அவர் விசாரணை செய்து நஷ்டத்தைக் கிழவி தான் கொடுக்க வேண்டுமென்று தீர்

மானம் பண்ணினர். கிழவி அழுதுகொண்டே செல்கையில் வழியில் கோலி விளையாடிக் கொண்டிருந்த ஒரு பையன் "ஏனம்மா இவ்விதம் அழுகிறாயே?" என்று கேட்டான். அவள் நடந்ததைச் சொல்ல அவன் நீதியின் உண்மையைத் தெரிந்துகொண்டு இவ்விதம் அநியாயமாய்த் தீர்ப்புச் செய்தான். "வாயில் மண் விழுவதுபோல இக்கோலி குழியில் விழட்டும்" என்று சொல்லிக் கோலியை உருட்டினன். அதைப் பார்த்திருந்தவர்கள் நியாயாதிபதிக்கு அறிவித்தார்கள். அவர் அப் பையனை வரவழைத்து "நீ ஏன் அவ்விதம் சொன்னாய்? நீ அதை விசாரித்துத் தீர்மானஞ்செய் பார்ப்போம் என்றார். பையனும் அப்பொழுதே திருடர்களையும், கிழவியையும் வரவழைத்து திருடர்களை நோக்கி "என்ன சமாச்சாரம்?" என்று கேட்டான். திருடர் மூவரும் "ஐயா! நாங்கள் நாலுபேரும் ஒரு தோண்டியில் சில சொத்துக்களைப் போட்டு அதைக் கிழவி யறிய ஒரு இடத்தில் புதைத்துவைத்து நாங்கள் நால்வரும் வந்து கேட்டாலொழிய இதை ஒருவரும் தோண்ட விடாதே என்றோம். ஒருவன் தனித்துவந்து கேட்ட பொழுது கிழவி அதைத் தோண்டிக் கொடுத்துவிட்டாள்" என்றார்கள். "நால்வரும் வந்து கேட்டால்தானே தோண்டியைக் கொடுக்கச் சொன்னீர்கள்?" என்று கேட்டான். "ஆம்" என்று பதில் சொன்னார்கள். "இப்பொழுது நீங்கள் எத்தனைபேர் வந்து தோண்டியைக் கேட்கிறீர்கள்" என்றான். "மூன்றுபேர்" என்று பதில் சொன்னார்கள். "நாலுபேரும் வந்து கேட்டால் கிழவி கொடுப்பாள் போங்கள்" என்று சொல்லி அனுப்பிவிட்டு "நஷ்டத்தைக் கிழவி கொடுப்பதற்கில்லை" என்று நியாயாதிபதியிடம் சொன்னான். நியாயாதிபதி பையன் சாமர்த்தியத்திற்கு அதிகமாகப் புகழ்ந்து ரூபாய் நூறு இனாம் அளித்தார்.

கருத்து.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. (திருக்குறள்)

A WITTICISM

சித்திரப் பேச்சு

தெலுங்கு தேசத்தில் தெனாலி என்னும் கிராமத்தில் ராமன் என்பவ னொருவ னிருந்தான். அவன் தெனாலியில் பிறந்தமையால் அவனுக்குத் தெனாலிராமன் எனப் பெயர் வந்தது. ஒருநாள் ராயர் தன் சமஸ்தானத்து மந்திரியைக் கூப்பிட்டு அநேக குதிரைக் குட்டிகளை வாங்கிவந்து வீட்டிற்கு ஒன்று கொடுத்துத் தினக்காக மாதம் ஐந்து ரூபாயும் கொடுக்கும்படி கட்டளை யிட்டார். மந்திரி அப்படியே வீட்டிற்கு ஒன்றுகக் கொடுத்து ரூபாயும் கொடுத்தார். சில மாதங்கள் சென்றபின் ஒருநாள் ராயர் மந்திரியை அழைத்துக் குதிரைக் குட்டிகளைக் கொடுத்து எத்தனை மாதங்களாயின என்று வினவ, ஆறு மாதங்கள் சென்றன என்று மந்திரி உரைத்தார். அப்படியானால் இன்று சாயங்காலம் குதிரைக் குட்டிகளை யெல்லாம் நமது அரண்மனை வந்து சேரும்படி செயவிக்க வேண்டுமென்று உத்தரவு பண்ணினர். மந்திரி அவ்விதமே குதிரைகளைச் சேர்ப்பிக்கும்படி எல்லோருக்கும் அறிவித்தார். அன்று சாயங்காலம் குறித்த நேரத்தில் எல்லாக் குதிரைகளும் வந்து விட்டன. சில குதிரைகள் பருத்துக் கொழுத்து அடக்க முடியாதபடி குதித்துக் கொண்டு வந்தன, "பல பருத்தும் சாந்தமுள்ளவைகளாய்

இருந்தன, ராயர் மந்திரியைக் கூப்பிட்டுக் குதிரைகளெல்லாம் வந்துவிட்டனவா?'' என்று வினவ ''எல்லாம் சரியாய் வந்துவிட்டன, தெனாலிராமன் குதிரை மட்டும் வரவில்லை'' என்று சொன்னார். தெனாலிராமனை வரவழைத்து விசாரிக்கையில் அவன், ''என் குதிரை அதிகமாகத் தீனி தின்று கொழுத்திருக்கிறது. நான் ஒருவனைப் பிடித்துவர முடியாது. பலசாலிகளான திருக்கர்கள் நான்கு பேரை அனுப்பிப் பிடித்துவரச் சொல்லுங்கள்.'' என்றான். அதைக் கேட்டு ராயர் தாடிநீண்ட திருக்கனை அனுப்ப அவனைத் தெனாலிராமன் அழைத்துக் கொண்டுபோய் ஒரு சிற்றறையிலிருந்த ஒரு துவாரத்தைக் காட்டி ''அதன் வழியாய்த் தலையை நீட்டிக் குதிரையைப் பார்'' என்று சொன்னான். திருக்கனும் தலையை நீட்டிப் பார்க்கவே குதிரை நெடுநாளாய் ஆகாரம், தண்ணீர், இல்லாமலிருந்தபடியால் திருக்கன் நீண்ட தாடியைப் புல்லென் றெண்ணிக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டது. திருக்கன் தாடியை வெளியே இழுத்துக்கொள்ள முடியாமல் கதறினான். உடனே தெனாலிராமன் ராயரிடம் சென்று ''நான் முன்னமே பலசாலிகளான நால்வரை அனுப்பும்படி கேட்டுக் கொண்டதற்கு நீங்கள் ஒருவனை யனுப்பினீர்கள், குதிரை அவன் தாடியைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டது அவன் கதறுகிறான்'' என்றான். உடனே ராயர் பலசாலிகளான இன்னும் ஐந்து திருக்கர்களை அழைத்துக்கொண்டு போய்ப் பார்க்கையில் திருக்கன் தாடியை விடுவித்துக்கொள்ள முடியாமல் கதறுகிறதைக் கண்டு வீட்டை இடித்து உள்ளே சென்று குதிரையின் தாடியை விடுவித்துப் பார்க்கையில் குதிரை கிழக்கே கூட சக்தியற்றதாய் மிகவும் மெலிந்து சாகிறப்போலிருந்தது. ''ஏ தெனாலிராமா! குதிரைக்கென்று மாதம்

ஐந்நூறுபாய் கொடுத்து வந்தேனே அதை நீ தின்று விட்டாயோ" என்று கேட்டார். தெனாலிராமன் "சுவாமி, இப்படித் தினை ஒன்றும் போடாமல் மெலிந்திருக்கும் போதே குதிரை ஒரு துருக்கன் தாடியைத் தீர்த்துவிட்டது. இன்னும் நன்றாய்த் தினைபோட்டு வளர்த்து வந்தால் எத்தனை துருக்கன் தாடியைப் பிய்க்குமோ என்று தான் குதிரைக்கு ஆகாரம் போடவில்லை" என்றான். அது கேட்டு அங்கிருந்தவர்கள் எல்லோரும் தெனாலிராமன் பேசின பேச்சின் சாதுர்யத்திற்காகச் சிரித்தார்கள்.

கருத்து.

தெனாலிராமன் தன்மையை அறியாது அவனிடம் குதிரையை ஒப்புவித்தது தன் புத்தியீனம் என்று ராயர் அறிந்து கொண்டார்.

ENVY
பொறுமை

ஒரு ஊரில் இரண்டு சிநேகிதர்கள் இருந்தார்கள். ஒருவன் பணக்காரன். அவனுக்கு வீடு முதலான சகல ஐசுவரியமும் இருந்தது. மற்றவன் மிகவும் ஏழை. அவ் வேழை, பணக்காரனது ஐசுவரியத்தைக் கண்டு மிகவும் பொறுமை கொண்டு அவ்வூரை விட்டு அதற்கருகில் இருந்த காட்டை நோக்கிப் புறப்பட்டான். வழியில் சற்று இளைப்பாறும் பொருட்டு ஒரு மரத்தடியில் உட்கார்ந்தான். அங்கு சன்னியாசி ஒருவர் கையில் இரண்டு பாய்ச்சிகை (பகடை) களுடன் வந்து "அப்பா நீ ஏன் கிலேசமுற்றிருக்கிறாய்" என்று கேட்டார். "சுவாமி! என்னண்டை வீட்டுக்காரனது செல்வத்தைக் கண்டு பொறுமை கொண்டு இவ்விதம்

வருந்துகிறேன்" என்றான். உடனே தான் கொண்டுவந்த அந்தப் பாய்ச்சிகைகளைக் கொடுத்து "வேண்டியதை நினைத்து இவைகளை உருட்டினால் எல்லாம் உண்டாகும், ஆனால் உன்னைக் காட்டிலும் உன்னண்டை வீட்டுக்காரனுக்கு இருபங்கதிகமாக உண்டாகும்" என்று சொல்லி மறைந்தார். எளியவன் சந்தோஷத்துடன் வீடு வந்து தனக்கு ஒரு மாளிகையும், சகல சம்பத்துக்களும் உண்டாக நினைத்துப் பாய்ச்சிகை ஒன்றை உருட்டினான். எல்லாம் உண்டாயின. பக்கத்து வீட்டுக்காரனுக்கு இருமடங்கு அதிக முண்டாயின. அதுகண்டு வெகு துயரமுற்றுப் பின் தன் வீட்டில் பாதியும், கண்ணிலொன்றும் போகக்கடவது என்று மற்றொன்றை உருட்டினான். அவ்விதமே ஆயிற்று. அண்டை வீட்டுக்காரனுக்கோ வீடும் சகல சொத்துக்களும் இரண்டு கண்களும் போயின. அவற்றைக் கண்டு சந்தோஷித்தான். நெடுநாளாயச் சமயம் பார்த்திருந்த திருடர்கள் அவ்விருவரும் குருடர்களாயினமை கண்டு வீட்டைக் கொள்ளையடித்துச் சகல சொத்துக்களையும் எடுத்துப் போனார்கள். பின் ஏழையாகி அதிகமாகத் துக்கித்தான்.

கருத்து.

அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும். (திருக்குறள்.)

OBEDIENCE TO ELDERS

மூத்தோர்க்கு இணங்கல்

வெகு காலத்திற்கு முன் ஒரு மனிதன் இருந்தான். அவனுக்கு ஒரு புத்திரியும் இரண்டு புத்திரரும் இருந்தனர். அவர்கள் ஒரு குடிசையில் வசித்து வந்தார்கள்.

ஒருநாள் அந்தப் பிள்ளைகள் வேட்டையாடுவதற்குக் காட்டிற்குப் புறப்பட்டார்கள். பெண் தானும் வருவதாகச் சொன்னாள். "நீ காட்டிற்கு வரலாமா வீட்டிலதானே இரு" என்று சொல்லிவிட்டுப் போனார்கள். அப்பொழுது அந்தப் பெண் வீட்டிலேயே அழுதுகொண்டிருந்தாள். அந்த வழியாக ஒரு மந்திரக் கிழவி வருவதைக் கண்டு அவளிடத்தில் தன் சகோதரர்கள் தன்னை விட்டுப் போன செய்தியை உரைத்தாள். கிழவி, "எனக்கு ஒரு பிள்ளையிருக்கிறான். அவனைக் கலியாணம் பண்ணிக்கொள்ளுகிறாயா?" என்று கேட்டாள். அந்தப் பெண் ஒத்துக்கொள்ளவே, அந்தக் கிழவி அப் பெண்ணை வீட்டிற்கு அழைத்துப் போனாள். கிழவிக்கு யானையே பிள்ளையாகையால் ஒருவருக்குந் தெரியாமல் பச்சையிலை ஒன்றை யானையினிடம் கொடுக்க அது அதைத் தின்று ஒரு ராஜகுமாரனைப்போல் ஆய்விட்டது. பின் இருவருக்கும் கலியாணம் நடந்தது. பிறகு ஒருநாள் அப்பெண் நன்றாகச் சமையல் செய்யவில்லை என்று யானை அவளை ஒரு தென்னமரத்தின்மேல் தூக்கி வைத்துவிட்டுப் போய்விட்டது. அந்தப் பெண் அங்கே அழுதுகொண்டிருந்தாள். வேட்டையாடச் சென்றிருந்த அவள் சகோதரர்கள் அந்த வழியாய்த் திரும்பி வருகையில் அந்தப் பெண்ணின் அழுகுரலைக் கேட்டு அவளைத் தங்களுடன் கூட்டிக்கொண்டு வீட்டிற்குப் போகப் புறப்பட்டார்கள். யானை அவர்களைத் துரத்திக்கொண்டு வந்தது. சகோதரர்கள் மந்திரம் ஒன்றைச் சொல்லவே திடீரென்று ஒரு கதவு திறக்கப்பட்டது. அதற்குள் புகுந்து ஒளித்துக்கொண்டார்கள். யானை தன் இருப்பிடத்திற்குப் போனபிற்கு அவர்கள் சுகமாக வீடுபோய்ச் சேர்ந்தார்கள். சகோதரர்கள் சொல்லைக் கேட்டு வீட்டி

லேயே இருந்தால் இக் கஷ்டம் வராதென்று அவளுக்கு அப்பொழுது தோன்றியது.

கருத்து.

"மூத்தோர்சொல் வார்த்தை அமிர்தம்."



FORTITUDE

தைரியம்

வேகு காலத்திற்குமுன் அநேக வர்த்தகர்கள் சேர்ந்து சமுத்திரத்தில் பிரயாணம் போனார்கள். போகிற வழியில் தீவு ஒன்றிருந்தது. அதில் எல்லோரும் இறங்கி வேண்டிய கனிதினுசுகளை அருந்தி மறுபடியும் கப்பலேறிப் போய்விட்டனர். ஒருவன் மட்டிலும் நன்றுகத்தின்று ஒரு மரத்தினடியில் படுத்து நித்திரை போய்விட்டான். பிறகு எழுந்து ஒருவரும் இல்லாதது கண்டு திகிலடைந்து ஒரு மரத்தின் மேலேறி நாலாபக்கமும் பார்க்கையில் மலையொன்று தோன்றினது. அங்குச் சென்று பார்க்கையில் அது அதிக மழமழப்பாயும் சுற்றிப் பார்க்க முடியாத அவ்வளவு பெரியதாயிருந்தது. பார்த்துக் கொண்டிருக்கையில் திடீரென இருள் வந்து மூடிக்கொண்டது. இது என்னவென்று பார்க்கையில் ஒரு கழுகு தன் இறக்கைகளைப் பரப்பி அந்த மலையைப் போன்ற உருவில் உட்கார்ந்தது. அப்பொழுது அது ஒரு கழுகின் முட்டை என்று அறிந்து அந்தப் பக்ஷியின் கால்களைச் சேர்த்துக் கட்டிக்கொண்டான். அது மலையால் சூழப்பட்ட ஒரு பள்ளத்தாக்கிற்குக் கொண்டுபோய் விட்டது.

அங்கு இரத்தினக் கற்களும், பாம்புகளும் விசேஷமாயிருந்தன. அவன் முன்னிலும் அதிக திகிலடைந்து சில இரத்தினக் கற்களை எடுத்து மடியில் கட்டிக்கொண்டிருக்கையில் மாம்ச கண்டங்கள் ஆகாயத்திலிருந்து தொப்புத் தொப்பென்று விழுந்தன. அவைகள் இரத்தின வியாபாரிகளால் எறியப்படுகின்றன வாதலால் அவற்றிலொன்றைச் சேர்த்துக் கட்டிக்கொண்டால் பக்ஷி தூக்கிப் போய் எங்கேயாவது விட்டுவிடும் என்று எண்ணி ஒன்றைச் சேர்த்துக் கட்டிக்கொண்டான். கழுகு அதைத் தூக்கிச் சென்று ஒரு மலையினுச்சியில் போடவே அங்கு இருந்த இரத்தின வியாபாரிகள் பயந்தோடினர். அவர்களை அழைத்துத் தன் வரலாற்றைச் சொல்லி அவன் கொண்டு வந்த இரத்தினங்களிற் சிலவற்றை அவர்களுக்குக் கொடுத்துப் பின் வழியே நடந்து சுகமாய் வீடு போய்ச் சேர்ந்தான்.

கருத்து.

அபாயம் வந்த இடத்து தைரியத்தைக் கைவிடலாகாது.

TRUTHFULNESS

உண்மையினியல்பு

நெடுநாளைக்கு முன் அரிச்சந்திரன் என்னும் அரசனொருவன் அயோத்தியை அரசாண்டு வந்தான். அவன் மிகவும் சத்தியவான். எப்பொழுதும் மெய் பேசுதலையே கடமையாகக் கொண்டவன். இவன் குணத்தைப் பற்றி வசிஷ்டருக்கும் விசுவாமித்திரருக்கும் வாக்குவாதம் உண்

டாயிற்று. வசிஷ்டர் அரிச்சந்திரன் ஒருபொழுதும் பொய் புரையாடான் என்றனர். அதைக்கேட்ட விசுவாமித்திரர் அரிச்சந்திரனை எவ்விதத்திலும் பொய் பேசுவிக்க வேண்டுமென்று எண்ணி பலவிதத்திலும் முயன்றார். அவர் முயற்சி வீணாய் விட்டது. பின்னும் ராஜ்யத்தைப் பறித்துக்கொண்டு அவன் ஒரு பக்கமும், அவன் மனைவியொரு பக்கமுமாகப் பிரிந்து அலையும்படியும் செய்தார். அப்பால் பல இழிவான தொழில்களையும் செய்வித்தார். குழந்தை பாம்பு கடித்திறக்கவும், சந்திரமதியின் பேரில் பொய்க் குற்றம் உண்டாகவும், அவளை அரிச்சந்திரன் கையால் வெட்டவும் செய்தார். இவற்றை எல்லாம் ஒரு பொருட்டாக எண்ணாமல், மெய்யையே உறுதியாகக் கொண்டான். அதனால் விசுவாமித்திரர் அவனிடத்தில் தன் சாகசம் நடவாமற் போனதைக்கண்டு தான் செய்த பிரதிக்ஞையின்படி தபசில் பாதியும் அவனிடமிருந்து பெற்ற நாடுகளையும் கொடுத்து இறந்த பாலகனையும் உயிர்ப்பித்துக் கொடுத்து பரமசிவன் முதலான தேவர்கள் முன்னிலையில் "இந்த அரிச்சந்திரன் மனுநெறி தவறுதவன், வாய்மை வாய்ந்த அரசன்" எனக் கொண்டாடினர். தேவர்கள் பூமாரி பெய்தனர். வாத்ய கோஷங்கள் முழங்கின. அரிச்சந்திரன் சகல சம்பிரமத்துடன் ராஜ்யத்தைப் பெற்று மனுநெறி தவறாமல் வெகுகாலம் ராஜ்ய பரிபாலனம் பண்ணிவந்தான்.

கருத்து.

"உண்மையிற் சிறந்த ஒழுக்க மொன்றில்லை."

17

HONESTY

நாணயம்



ஒரு ஊரில் ஒரு பழக்காரன் இருந்தான். அவன் ஒருநாள் ஒரு தட்டு நிறையப் பழங்களை வைத்துக்கொண்டு வீதியின் வழியே விற்றுப்போனான். அப்பொழுது ஒரு பழம் தவறிக் கீழே விழுந்தது. அதை அறியாது அவன் போய்விட்டான். அதைப் பார்த்திருந்த ஒரு பையன் அதை எடுத்தோடிச் சென்று பழக்காரன் கையில் கொடுத்தான். அதை யறிந்த பழக்காரன் அவன் யோக்கியனென அவனுக்கு முதல்தரமான பழமொன்று கொடுக்க, அவன் அதை எடுத்துக்கொண்டு போகையில் அதைப் பார்த்திருந்த மற்றொரு பையன் "இந்தப் பழம் நன்றாயிருக்கிறதே. என்ன விலைக்கு வாங்கினாய்?" என்று கேட்டான். அதற்கு அந்தப் பையன், "இதனை நான் பணங் கொடுத்து வாங்கவில்லை. அதோ போய்க்கொண்டிருக்கிற பழக்காரனுடைய கூடையிலிருந்து ஒரு பழம் அவனுக்குத் தெரியாமல் கீழே நழுவி விழுந்தது. அதனை நான் எடுத்தேன். நானே அதனை உபயோகித்துக்கொண்டிருக்கலாமல்லவா? அப்படிச் செய்வது தகாது, அது நாணயமல்லவென்று நினைத்து அதனைப் பழக்காரனுக்குக் கொடுத்தேன். என் நாணயத்திற்கு மெச்சி அவன் இந்தப் பழத்தை எனக்கு இனாமாகக் கொடுத்தான்" என்று பதில் சொல்லி, அந்தப் பழத்தை அறுத்து அவனுக்கும் கொஞ்சம் கொடுத்தான்.

(கருத்து)

"உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்ளே மெனல்." (திருக்குறள்).



TRUE TO ONE'S WORD

சொல் தவறுமை

வெகு காலத்திற்குமுன் சந்தனு என்னும் அரசன் ஒருவ னிருந்தான். அவன் ஒரு நாள் வேடிக்கையாக யமுனை யாற்றங் கரையில் உலாவிக்கொண்டிருந்தான். அங்கே பெண்களுக் குரிய எல்லா லக்ஷணங்களும் அழகு வாய்ந்த கன்னிகை ஒருத்தி வந்ததைக் கண்டு அவளைத் தன் நாயகியாக்கிக் கொள்ள விருப்பங் கொண்டான். அவள் அழகு வாய்ந்தவளா யிருந்த போதிலும் இழி குலத்தாளாகிய ஒரு செம்படவனுடைய பெண். அவள் பெயர் பரிமளகந்தி. அவளுடைய தகப்பனிடம் அரசன் இச்செய்தியைச் சொல்ல அவன், "என் புதல்வியின் வயிற் றில் பிறக்கும் புதல்வனைப் பட்டத்திற்கு உரியவனாகச் செய்வதாய் வாக்குத்தத்தம் செய்தால் என் புதல்வி உன க்கு பத்தினியாவாள்" என்றான். அதைக்கேட்ட, அரசன் திடுக்கிட்டு இரத்தினம் போன்ற புத்திரன் ஒருவன் எனக் கிருக்க அவனைப் பட்டத்தினின்றும் நீக்கி இவள் புத்திர னுக்குப் பட்டம் கொடுப்பது எவ்வாறு என்று நினைத்து மனவருத்தப் பட்டுக்கொண்டு வீட்டிற்குத் திரும்பினான். தன் தகப்பன் கிலேச முற்றிருப்பதை முகக்குறிப்பாற் கண்ட புத்திரன் அரசனுக்கு அந்தரங்கமான மந்திரியால் காரணத்தைத் தெரிந்துகொண்டான். மந்திரியால் செம் படவனுடைய பெண்ணின் விருத்தாந்தம் சொல்லப்பட்ட வுடனே அவன் அச் செம்படவனிடம் சென்று "உன் மகளை அரசனுக்குத் தடையின்றிப் பத்தினியாகக் கொடுக் கலாம். அவ்வரசனுடைய பட்டத்திற்கு நானே உரியவன். நானே நீ விரும்பியவா றெல்லாம் செய்கிறேன். என் பெயர் தேவவிரதன். இனி என் தந்தைக்கு உன் புத்திரியி

னிடமாகப் பிறக்கும் பிள்ளையையே எங்களுக்கெல்லாம் அரசனுக்குகிறேன். எனக்கு இராஜ்யம் தேவையில்லை. இதுவே சத்தியம்" என்று எல்லாரு மறிய வாக்குத் தத்தம் பண்ணினான். "ஒருகால் என் வயிற்றில் பிறக்கும் புத்திரர்கள் அவ் விராஜ்யத்தைக் குறித்து வாதாடுவார்கள் என்ற பயம் இருக்கலாம்; அதற்கும் இப்பொழுதே ஒரு முடிவுசெய்து விடுகிறேன். அதாவது, மணமின்றி நான் இப் பிரமசரிய நிலையிலேயே இருந்து விடுகிறேன்" என்று பலவாறாக எல்லோரும் ஆச்சரியமடையும்படி வாக்களித் துப் பரிமளகந்தியை இரதத்தில் ஏற்றிக்கொண்டு தன் தந் தையின் முன்பு வந்து சேர்ந்தான். அவ்விதம் வந்ததைத் தகப்பன் கண்டு "ஓ குழந்தாய்! உன் உத்தரவின்றி மரணம் உன்னை அணுகாதொழிக" என்று ஆசீர்வதித்தான். பின்பு, செம்படவன் அவனுடைய பெண்ணின் வரலாற்றை முற் றும் சொல்லக் கேட்டு அவளை மணந்து அநேக நாள் இன் புற்றிருந்தான். அப்பால் தேவவிரதன் கொண்ட பிரம சர்ய விரதத்தைக் கெடுக்க அநேக இடையூறுகளுண்டாக, அவைகளை எல்லாம் ஒரு பொருட்டாக எண்ணிப் பாரா ட்டாமல் தான் அளித்த வாக்கையே பெரிதாக எண்ணி அதனால் எல்லாராலும் அவன் கொண்டாடப்பெற்றான்.

(கருத்து)

"யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன் றும் வாய்மையி னல்ல பிற." (திருக்குறள்).

BE NOT HASTY

அவசரப்படாதே



வெகு காலத்திற்கு முன் குமணன் என்னும் பெயருள்ள அரசன் ஒருவன் இருந்தான். அவன் மிகவும் தான தருமஞ் செய்யும் தயாள குணசீலன். அண்டின பேர்களை அன்புடன் பராமரித்து வேண்டிய பொருள்களை விரும்பிக் கொடுக்கும் இயல்பை உடையவன். அப்படி இருக்கும் நாள்களில் ஒரு வித்வான் அவனிடம் தான் பாடின பாடலொன்றைக் காட்டித் தக்க பரிசு பெற பரிவுடன் சென்றான். இதனை யறிந்த சில தோழர்கள் "குமணன் உங்கள் முன்னோர்களால் சேகரித்து வைக்கப்பட்ட திரவியங்களை எல்லாம் வீணே தான தருமங்களில் செலவு செய்து தரித்திரனாய்க் கொண்டு வருகிறானே, அதை நீ யறியாயோ" என்று அவன் சகோதரன் அமணனிடம் உரைத்தார்கள். அவன் அதைக் கேட்டு மிகவும் கோபத்துடன் தன் சகோதரனைக் கண்டிக்க, அவன் இனி இவனுடன் வாழ்தல் தகுதியன்று; இப்பொழுதே காட்டிற்குச் செல்லுதல் மிகவும் நலம் என்று கருதிக் காட்டிற் கேகினான். அது கண்டு அமணன் அந்த ராஜ்யத்தின் பட்டத்தைத் தான் தரித்துக்கொண்டு அச் சங்கதியை ராஜ்யமெங்கும் அறிவித்துக் காட்டிற்குச் சென்ற தன் அண்ணனாகிய குமணன் தலையைக் கொண்டு வருகிறவர்களுக்கு அளவிறந்த திரவியம் அளிப்பதாக அங்ஙகார முழுவதும் விளம்பரப் படுத்தினான். அதுகேட்டு ஒரு வித்வான் குமணனிடம் சென்று கவியொன்று பாடினான். அவர் அவனைக் கொண்டாடி, கொடுக்க வேறு பரிசு இல்லாததால் தன் சிரசையே அளிப்பதாகச் சொன்னார்.

வித்வான் அது கண்டு "கூடாது. கூடாது. உம்முடைய சிரசைப்போல் செவ்வாழைக் கட்டை யொன்றுற் செய்து கொள்ள எனக்கு உத்தரவு அளித்தால் போதும்" என்று வேண்டினான். அவ்விதம் உத்தரவு அளிக்கவே செவ் வாழைக் கட்டையாற் செய்த அத்தலையை அமண னிடம் காட்டிப் பரிசு பெற்றுச் சென்றனன். அப்பால் அமணன் தன் தமயன் குமணன் இறந்ததை நினைத்துப் பலவாறுய்த் துக்கித்து ஒன்றுந் தோன்றுதவனுய் முன் தன்னிடம் வந்த வித்வானை வரவழைத்து "இப்பொழுது என் தமையனை உயிருடன் அழைத்து வந்தால் உமக்கு ஐயாயிரம் பொன் இனும் கொடுப்பேன்" என்று அறிவித் தான். அவ் வித்வான் குமண னிருக்கு மிடஞ்சென்று அம ணன் சொல்லியதை எல்லாம் சாங்கோபாங்கமாய் எடுத் துரைத்து அவனை அழைத்துப்போய் அமணனிடம் விட் டான். அப்போது அமணன் தன் தமையனுடைய காலில் விழுந்து பணிந்து, "ஆலோசியாமல் நான் அவசரப்பட் டுச் செய்த தீர்மானத்திற்காக என்னை மன்னித்துக் காக்க வேண்டும். இனி எந்தக் காரியத்திலும் அவசரப்படாமல் ஆலோசனையோடு நடப்பேன்" என்று வேண்டினான். குமண ராஜனும் அதுகண்டு உள்ளங் களித்தான். இருவரும் அன்று முதல் வெகு சந்தோஷத்துடன் அரசு செலுத்தி ஒருமனப்பட்டு வாழ்ந்து வந்தனர். வித்வா னும் வேண்டிய திரவியம் பரிசாகப் பெற்றுச் சென்றான். 'உடன் பிறப்பு இல்லாத உடம்பு பாழ்' என்பது அமண னுக்கு அப்பொழுது தான் தெரிய வந்தது.

(கருத்து)

அவசரப்பட்டு யாரையும் அவமதிக்கலாகாது.

LOYALTY

ராஜ விசுவாஸம்

இந்தியாவுக்குச் சக்கரவர்த்தியாகிய மாட்சிமை தங்கிய மன்னர் ஏழாவது எட்வர்ட் பிரபுவுக்கு இரண்டாவது குமாரரான ஐந்தாவது ஜார்ஜ் என்னும் இளவரசர் 1865வது ஜூன்மாதம் 3உ லண்டன் நகரத்தில் பிறந்தார். பட்டத்துக்குரிய இவருடைய மூத்த சகோதரர் காலஞ் செல்ல, இவரே சிம்மாசனம் ஏறினர். இவர் பட்டத்திற்கு வருவதற்குமுன் வேல்ஸ் தேசத்து இளவரசராக இருந்தார். இவர் பன்னிரண்டு வயதிலேயே கப்பல் செலுத்தும் முறைகளை யுணர்ந்தார். பின் கப்பற்றலைவராகவும் நியமிக்கப் பெற்று 1893வது விக்டோரியா மேரி என்னும் சீமாட்டியை மணம்புரிந்து ஐந்து குமாரர்களையும் ஒரு குமாரியையும் பெற்று வாழ்ந்து வந்தார். பிறகு உலகமுழுவதையும் சுற்றி யாத்திரை செய்து, ஜனங்களின் விசுவாஸத்தையும் அன்பையும் பெற்றார். லண்டன் நகரத்தில் கூடிய மகா சபையொன்றில் "இந்தியா தேயத்தார் மிகவும் சாந்தமுள்ளவர்களாயும் டம்பம் என்பது சிறிதும் இல்லாமல் அடக்கமுடையவர்களாகவும் வாழ்கிறார்கள்; மாதா, பிதா, குரு, தெய்வம் என்னுமிவர்களைப் போற்றி வருவதோடு அரசனையும் வெகு பக்தியுடன் விசுவஸித்து வருகிறார்க" ளென்று கூறினர். அவர்களின் சுகதுக்கத்தை நம்முடையதாகப் பாவித்து வந்தால் அவர்கள் முன்னிலும் அதிக பக்தியுடன் இருப்பார்க ளென்றும் சொன்னர். பின்பு ஒரு கடித மூலமாய் விக்டோரியா மகாராணியாரு

கும், எட்வர்டு சக்கரவர்த்தியாருக்கும் இருந்ததுபோல் இந்தியா குடிகளின் க்ஷேமமும் விர்த்தியுமே தம் மனத்தில் குடிகொண் டிருப்பதாயும் அறிவித்தார். தமது மனைவி யுடன் 1911ஸ்ல டிசம்பர்மீ டில்லியில் மகுடாபிஷேகங் கொண்டதே அவர் நம்மிடத்தில் விசுவாஸமுள்ளவராக இருத்தலுக்கு அறிகுறியாகும். அம் மகுடாபிஷேகத்தை ஒரு மஹோற்சவமாக எல்லாரும் கொண்டாடினர். ராஜாங்கத்தின் ஒவ்வொரு இலாகாவையும் சீர்திருத்திப் புதிய ஏற்பாடுகள் பலவும் செய்தனர். இந்துக்களில் அநேகருக்கு உயர்ந்த உத்தியோகத்தை அளிக்க, அவர்கள் நல்ல பதவியில் வாழ்ந்து வருகின்றனர். நமது சக்கர வர்த்தி வஜ்ர சரீரத்துடன் சிரஞ்சீவியாய் நீடூழி காலம் வாழ்ந்துவர வேண்டுமென்று நாம் எல்லோரும் எல்லாம் வல்ல கடவுள எப்பொழுதும் பிரார்த்திக்கக் கடவோம்.

(God save the King).

நமது இந்திய சக்ரவர்த்தி யாகிய ஐந்தாம் ஜார்ஜ் மகிபர்

வாழ்த்துப் பாட்டு

(1)

வாழ்க வாழ்கவே - தினம் - வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்கவே

(2)

மன்னன் வாழ்கவே - நமது - மன்னன் வாழ்கவே
மன்னு மிறைவன் இன்ன ருளால் மன்னி வாழ்கவே

(3)

தந்தை போலவே - வித்தை - தான மாக்கினன்
முந்தை நாளில் வந்த துன்பம் முற்றும் நீக்கினன்

(4)

நாட்டி லேகினும் - பெருங் - காட்டி லேகினும்
வாட்ட மின்றி சீர்செ யுஞ்சி ரேட்ட ணுகும்

(5)

நீதி நாட்டினன் - நல்ல - நெறியைக் காட்டினன்
தீது புரியும் துஷ்டர் தம்மை சிறையிற் கூட்டினன்

(6)

அன்னை மேரியாம் - நம் - அரசி மைந்தரும்
தன்னை நேரும் மகிபர் ஐந்தாம் ஜார்ஜ் வேந்தரும்

(7)

வாழ்க வாழ்கவே - தினம் - வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்கவே.

C. R. N

துருவன்

'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்.'

அங்கம் — 1.

(உத்தானுபாதர் சபை)

உத்தானுபாதர் — ஏ பெண்மணீ! சுருசி! ஈசுவரனுடைய கிருபையால் நான் இவ்வளவு பெரிய ராஜ்யத்திற்கு அதிபதியாக இருக்கிறேன். எனக்கோ இரண்டு மனைவியரும் இரண்டு புத்திரர்களும் இருக்கிறார்கள். வேண்டிய சம்பத்துகளு மிருக்கின்றன. யாது குறைவு இருக்கின்றது?

சுருசி — ஏ நாதா! ஏன் அவ்விதம் உரைக்கின்றீர்? நான் தான் உமக்குப் பட்டமகிஷி. என் புத்திரன் உத்தமனே பட்டத்துக் குரியவன். மற்றவர்களை யெல்லாம் ஏன் நினைக்கவேண்டும்?

உத்தானுபாதர் — யாது தடையிருக்கின்றது? சுருசி! எனக்கு உன்னைவிடப் பிரியமானவர்கள் இவ்வுலகில் யாருளர்? ஏ உத்தமா! என் அருகில் வா.

அங்கம் — 2.

(துருவன் ஏதோ காரியமாக அரண்மனைக்கு வருதல்)

துருவன் — பாட்டு.

அப்பர் நம் திருவடிக்கு ஆசைவைத்தமே பாலன்
ஒய்யாரமாய் அருகில் உவந்து வந்தனனே.

அப்பா! உம்மைப் பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தேன்.

சுருசி — அடா துருவா! என் புத்திரன் அரசன் அருகிலிருக்க நீ யார்? ஏன் இங்கு வந்தாய்? நீ பட்டத்துக் குரியவ னல்லன். இராஜ சபையில் நிற்காதே. ஓடிப்போ.

அங்கம் — 3.

(துருவன் தாயிடம் செல்லல்)

இராகம் - நோட்.

சுநீதி — ஆசையுள்ள கண்மணியே
அன்புடைய என்நாயகமே
நீகிலேசங்கொண்ட காரணத்தைக்
கிட்டவந்து உரைத்திடுவாய்.

துருவன் — அம்மா, நான் தந்தையைக் காணும்பொருட்டு அரண்மனையில் போய் நின்றேன். அவர் அப்போது உத்தமனை அருகில் வைத்துச் சீராட்டிக்கொண்டிருந்தனர். அதைப் பார்த்து நானும் அருகில் சென்றேன். கிறிய தாயாராகிய சுருசி வந்து என்னைப் பலவாறுகத் திட்டித் தூரத்திவிட்டாள்.

சுநீதி — என் காலக் கொடுமை உனக்கு இப்படி நேர்ந்தது. அவள் பூர்வ ஜன்மத்தில் செய்த சுகிர்தத்தால் மேலான அப் பதவியை அடைந்தாள். சற்றுப் பொறுத்திருப்பாய் மகனே.

துருவன் — அம்மா! நானும் தவஞ்செய்து அப்படிப்பட்ட பாக்கியங்களை அடைய விரும்புகின்றேன். அதற்காக இப்பொழுதே காட்டுக்குச் செல்ல எனக்கு விடையளிக்கவேண்டும்.

இராகம் - கண்ணி சாமா, தாளம் - சாப்பு.

சுநீதி — கொஞ்சம்வயதடா கோமகனே இப்போ
கோபம் வேண்டாமடா கண்மணியே
வன்னமாங்காட்டினில் வருவது என்னமோ
வாடுதே என்னெஞ்சடா மகனே.

அப்பா! நீ குழந்தை ஆயிற்றே. நீ காட்டுக்கு எப்பொழுதும் போனதில்லையே. போகவேண்டாம்.

துருவன் — பாட்டு.

வரும்வினை தனைவிலக்க வசுதேவர் தானுமுண்டு
உன்தன் னடிகளென்னை என்னம்மணி
உடன்காக்கும் போய் வாரேன்.

கடவுள் துணை செய்வார். அஞ்சவேண்டாம். நான் போய் வருகிறேன்.

(இவ்விதம் துருவன் காட்டிற்குச் செல்லல்)

நாரதர் — நீ யாரப்பா இங்கு தனியே நிற்பவன்? நீ இங்கு வந்த காரணம் யாது?

துருவன் — அகவல்.

ஆரென என்னை அன்புடன் கேட்ட
நாரத முனியே நவின்றிடு வேனதை
உத்தான பாதரென் றுயருறும் அரசன்
புத்திரன் நானே புகழ்பெற மறையோய்.

ஸ்வாமி, என் சிறிய தாயார்ால் நேர்ந்த கொடுமையைச் சகிக்காதவனாய் கடவுளைக் குறித்துத் தவம் செய்யலாமென்று இங்கு வந்தேன். அதற்குத் தேவரீர் கிருபை செய்யவேண்டும்.

நாரதர் — வெகு காலமாகத் தவம் செய்த மகான்கள் எல்லாரும் சுவாமியைக் காணுமல் தவித்திருக்கிறார்களே. நீ ஒன்றும் தெரியாத சிறுவன் ஆயிற்றே. எப்படித் தவம் செய்யப் போகிறாய்?

துருவன் — ஸ்வாமி, உம்முடைய கிருபை மட்டிலுமிருந்தால் எல்லாம் எனக்குச் சரிவர நடக்கும்.

நாரதர் — பக்தியுள்ள சிறுவனே! நான் இப்பொழுது அஷ்டாக்ஷர மந்திரத்தை உபதேசிக்கின்றேன். ஸ்ரீமந் நாராயணன் நாமத்தைத் தியானித்து தவம் செய்தால் உனக்குக் காரியசித்தியாகும்.

(இங்குத் துருவன் உபதேசம் பெற்றுத் தவம் செய்தல்.)

துருவன் —

காவலிற் புலனைவைத்துக் கலிதன்னைக் கடக்கப் பாய்ந்து
நாவலிட்டுழி தர்கின்றேரும் நமன்தமர் தலைகள் மீதே
மூவுலகுண் டுமிழ்ந்த முதல்வ நின் னுமைங் கற்ற
ஆவலிப் புடைமை கண்டா யரங்கமா நகருளானே.

(திருமாலை)

அங்கம் — 4.

(உத்தானுபாதரிடம் நாரதர் செல்லல்)

நாரதர் — ஏ மன்னவா! உன் முகம் வாடி யிருக்கின்ற காரணம் என்ன?

உத்தானுபாதர் — ஸ்வாமி! எழுந்தருளவேண்டும். தேவரீர் வரவால் நான் தன்யனானேன். நான் என்ன செய்வேன்? அந்தப் பாவியாகிய சுருசி, துருவன் என்னிடம் வந்தபொழுது பலவாருகத் திட்டி ஓட்டிவிட்டாள். அவன் எங்கு அலைந்து திரிகிறானே அதை நினைத்து என் மனம் பதை பதைக்கின்றது.

அங்கம் - 5.

(தேவர்கள் பிரார்த்தனை)

தேவர்கள் — ஸ்ரீஹரிநாதா! துருவன் செய்யும் தவத்தால் அண்டங்கள் அக்கினி பற்றி எரிகின்றன. பக்தவத்சலா, ஆபத்சகாயா எங்களை இரக்ஷிப்பது தேவரீர் கடமை யன்றோ?

ஸ்ரீஹரி — தேவர்களே! அஞ்சவேண்டாம்! இதோ வந்து விட்டேன்.

அங்கம் - 6.

(துருவன் ஸ்ரீஹரியைக் காணல்)

துருவன் — பாட்டு.

கண்டேன் கமல மலர்ப்பாதம் காண்டலுமே
விண்டே யொழிந்த வினையா யினவெல்லாம்
தொண்டேசெய் தென்றும் தொழுது வழியொழுகப்
பண்டே பரமன் பணித்த பணிவகையே.

(திருவாய்மொழி)

ஏ, கருணாகரா! அன்புடன் தேவரீரது சேவையைத் தந்தருளினீர். என் முன்னோர்கள் செய்த தவப் பயனே ஆகும்.

ஸ்ரீஹரி — இந்த வனத்தில் என்னை நினைத்துச் சிறிதும் பயமின்றி அரிய தவம் செய்ததின் காரணம் என்ன?

துருவன் — ஏ பன்னகசயனா! எனக்கு நாடு நகரம் எதுவும் வேண்டாம். ஏழுலோகத்திற்கு மேல் ஒரு லோகத்தை விரும்புகின்றேன்.

ஸ்ரீஹரி — அப்பா துருவா! மூன்றுலகத்திற்கு மேல் உனக்கு ஒரு இடம் அளித்தேன். அதற்குத் துருவ சக்கரம் என்று பெயர். அங்கு நீயும் உன் தாயுமாக சுகமாக இருக்கக் கடவீர்கள்.

இலாபத்திற் பாதி.

யஜமான துரோகம் கூடாது.

அங்கம் - 1.

(பிரபு வீரர்களால் சூழப்பட்டிருக்கும் பொழுது சிந்திப்பது)

பிரபு — காண்கிலே னொருமீனையும்
கடலில்மிகுந்த அலைகளினால்
மச்சவகை யொன்றுதவீர
மற்றவகைகள் மிகவுண்டு.

ஏதுசெய்வோம் என்செய்வோம்
எப்படிவிருந்தைச் செய்வதுநாம்
எவ்வளவு விலையானாலும்
தடையில்லாமலே வாங்கிடுவோம்.

அடா சேவகா! தெருவில் யாராகிலும் மீன் விற்றுப் போனால் அவரை உடனே வரவழைப்பாய்.

அங்கம் — 2.

சேவகன் — அப்படியே செய்கின்றேன்.

(சேவகன் வாசற்படியண்டை பாரா இருக்கும்பொழுது செம்படவன் மீன் விற்றல்)

ஆகம் - நொண்டிச் சிந்து.

செம்படவா உனக்கு - இப்போ
நல்ல தோர் லாபமதைச் சொல்லுகிறேன் கேள்.

இந்த வரண்மனையில் - எங்கள் பிரபு
மீனுக்காக மிக்க ஆவல் கொண்டிருக்கிறார்.

உன்னை உள்ளேவிடுவேன் - மீனின்
பாதிலாபம் என்றனுக்குப் பகிர்ந்து தந்தால்.

செம்படவன் —

ஐயா தங்களிஷ்டம்போல் - உமக்கு
பாதிலாபம் தந்திடுவேன் உள்ளேவிடுங்கள்.

சேவகன் —

ஆஹா நல்லதப்பா - மீனுக்கு
அதிகமாக விலைகூறிக் கொண்டுவருவாய்.

செம்படவன் — (தனக்குள்) இச்சேவகன் பேராசைக்காரனாக இருக்கிறானே. இவனுக்கா இலாபத்தில் பாதி கொடுப்பது. கூடாது. கூடாது. இவனுக்கு அடி வாங்கிக் கொடுப்பதே நலம். இப்பொழுது பிரபுவினிடம் செல்லுகின்றேன்.

பிரபு —

அ ஆ ஆச்சரியம் - செம்படவா
இந்தமீனின் விலைஎன்ன தந்திடுகிறோம். (அ ஆ.)

செம்படவன் — (ஜாகம் - சங்கானை)

இம்மீனின் விலையையான் என்னென் றுரைத்திடுவேன்
என்முதுகின் மேலடிக்கும் நூறடியே இதன்விலையாம்.

(பிரபு செம்படவனுக்குப் பலவாறு சொல்லியும் கேளாததனால்)

அங்கம் - 3.

பிரபு — நமக்கம்மீன் அவசியம் வேண்டியது. ஆகையினால் அவனுரைப்பதுபோல் முதுகில் அடியுங்கள் மெதுவாக.

(செம்படவன் 50 அடி அடித்தவுடன் நிறுத்தச் சொல்லி)

செம்படவன் —

இம்மீனின் விலையதனை இரண்டுபேர் பெறவேண்டும்
தங்களது சேவகனும் தன்பாகம் பெறவேண்டும்
ஆகையினால் தயவுசெய்து அழைத்திடுங்கள் சேவகனை
பாதிப்பாகம் தருவேனென பகர்ந்தசன்மேல் உள்ளேவிட்டான்.

அங்கம் - 4

(பிரபு வெளிச் சேவகனை தண்டித்தல்)

பிரபு—இப் பேராசைக்காரனை சேவகனை நன்றாக அடியுங்கள். ஏ மந்திரி! செம்படவனுடைய புத்தி சாதுர்யத்தைப் பார்த்தீரா? இவனை பைத்தியக்காரன்! இவன் சாமர்த்தியத்தை மெச்சினேன். அவனுக்கு நல்ல வெகுமதி யளிப்பீராக.



